

பாமாலை 360 என் கர்த்தாவே உம்மில் நான்

1. என் கர்த்தாவே உம்மில் நான்
முழு நெஞ்சத்தாலே நான்
வாஞ்சை கொண்டு நித்தமும்
லோக வாழ்வை அற்பமும்
குப்பையும் என்றெண்ணுவேன்
உம்மையே சிநேகிப்பேன்

2. லோகத்தாரின் களிப்பு
துக்கங்கொண்ட நெஞ்சுக்கு
சஞ்சலத்தை யன்றியே
தேற்றத்தை உண்டாக்காதே
உம்மையே சிநேகிப்பேன்
அதால் பாக்கியம் அடைவேன்

3. தேவரீரில் வாழ்வெல்லாம்
பூர்த்தியாகவே உண்டாம்
உம்மில் வாஞ்சை கொள்வோனாய்
உண்மையான நேசனாய்
சேர்வோனுக்குத் தேவரீர்
அந்த வாழ்வைக் கொடுப்பீர்